தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 20, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 4, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அது உடலுக்கு ஏற்றவாறு அறிந்து செய்வதே சிறந்த மருத்துவம் ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

பள்ளிக்குக் கட்டடம்

***8109—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், வங்கனூர் கிராமத்திலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், வங்கனூர் கிராமத்திலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனியாக இடம் இல்லை. இப்பள்ளிக்குத் தனியாக இடம் பெறும் பட்சத்தில், நபார்டு நிதியுதவித் திட்டத்தின்மூலம் தேவையான கட்டட வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்; கல்வி தெரியாத பேர்களை இல்லாமல் செய்வோம்’ என்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திரைப்படப் பாடலுக்கேற்ப, தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு 226 ஆரம்பப் பள்ளிகள், 113 நடுநிலைப் பள்ளிகள், 829 உயர்நிலைப் பள்ளிகள், 402 மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றைத் தொடங்கியது. மேலும், இவ்வாண்டு 150 உயர்நிலைப் பள்ளிகள், 100 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்படவுள்ளதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு, தேசிய அளவில் கல்வித் துறையில் No.1 என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, வங்கனூர் கிராமத்திலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாண்புமிகு அம்மா அவர்களால் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இங்கே சுமார் 400 மாணவிகள் கல்வி பயில்கின்றனர். பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அம்மா அவர்களின் அரசால் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுமார் 352 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ஒரு சாதனையாகும். அந்த வகையில் வங்கனூர் கிராமத்தில் பள்ளிக் கட்டடம் கட்ட போதுமான இட வசதி உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு மறுபரிசீலனை செய்து, இவ்வாண்டே இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோதுதான், இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் ஒதுக்கப்படாத நிதியை அதாவது, 26,932 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். இந்தப் பெருமை தமிழக வரலாற்றில் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு, என்னிடத்தில் வந்திருக்கிற பதில், 'அந்த இடத்திலே இட வசதி இல்லை' என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இட வசதி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து, உடனடியாக உரிய அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அங்கே இட வசதி இருக்குமேயானால், நபார்டு திட்டத்தின் மூலமாக உடனடியாக அதைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருத்தணி தொகுதி மக்களின் சார்பிலே நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்து, திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை போன்ற பகுதிகளில் பழமைவாய்ந்த, செயலிழந்த நிலையிலுள்ள ஆய்வகம் மற்றும் வகுப்பறைக் கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தி, அதற்குப் பதிலாக புதிய கட்டடங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தில் இந்த ஆண்டு நிலுவையிலுள்ள 1,476 கோடி ரூபாயின்மூலமாக இடைநிலை கல்விக் இயக்கத்திற்காக செலவு செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல, மத்திய அரசு நிதி வழங்காத நிலையிலும்கூட, மாநில பொது நிதியிலிருந்து இடைநிலைக் கல்வி இயக்ககத்தின் மூலமாக 1,266 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2017–2018 ஆம் ஆண்டில் நபார்டு நிதியுதவித் திட்டத்தின்மூலம் 2,656 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பல்வேறு கட்டடப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பணிகள் இந்த ஆண்டு ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதியிலுள்ள இனாம்காரியேந்தல், ஆவூர் போன்ற பகுதிகளில், 15 ஆண்டுகளுக்கு முன்பாக உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அங்கு இட வசதிகள் இருந்தும், அப்பள்ளிகளுக்கு தற்போது கட்டடங்கள் வழங்கப்படவில்லை. புதிதாகத் துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, பல ஆண்டுகளுக்கு முன்பே துவங்கப்பட்ட பள்ளிகளுக்கு, அவற்றின் அவசியத்தைக் கருதி கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், சில கிராமங்களில், குறிப்பாக சடையனோடை என்ற கிராமத்திலே உள்ள பள்ளிக்கு நிதி ஒதுக்கியும், இடமில்லை என்ற காரணத்தால் இரண்டு ஆண்டுகளாகக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. எந்தவித உத்தரவும் இல்லாமல், இடம் தங்களுக்குச் சொந்தமானது என்று இந்து சமய அறநிலையத் துறை சொல்கிறது. ஆகவே, வருவாய்த் துறை, இந்து சமய அறநிலையத் துறை, கல்வித் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து, கூட்டுக் கூட்டங்களை நடத்தி, இவ்வாறு இட வசதியில்லாத பல்வேறு கிராமங்களில் அரசு நிதியொதுக்கியும் கட்டடங்கள் கட்டப்படாமல் இருக்கின்ற நிலையை மாற்றும்வகையில் உடனடியாக அனுமதியை

2017 ஜூலை 4]

கொடுக்க வேண்டும். எனவே, இத்தகைய கூட்டுக் கூட்டங்களை நடத்துவதற்கும், எனது தொகுதியில் விடுபட்ட பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுவதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாக இருப்பதால் கட்டடம் கட்டுவதில் இரண்டாண்டு காலம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அந்த இடம் அரசுக்குச் சொந்தமாக இருக்குமேயானால், அப்பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதேநேரத்தில், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைத் தேர்வு செய்ய வேண்டுமானால், உச்ச நீதிமன்ற வழக்கின் அடிப்படையில், அத்துறைக்கு வேண்டிய நிதியை ஒதுக்கினால் மட்டும்தான் கட்டடம் கட்ட இயலும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் குழு கூட்டப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின்மூலம் பரிந்துரைகள் வருமேயானால், அவற்றை இந்த அரசு உடனடியாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அதேபோல, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசையும், எங்களையெல்லாம் வழிநடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், பாவூர்சத்திரத்தில் ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. அது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகின்றன. அப்பள்ளியில் +1 மற்றும் +2–வில் மட்டும் சுமார் 840 மாணவிகள்

படித்து வருகிறார்கள். அங்கு மொத்தம் 8 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்தான் இருக்கின்றன. அதாவது, வரலாறு பாடத்திற்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடமே இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாணவிகள் தங்களின் அறிவுக்குத் தகுந்தாற்போல் எல்லாப் பாடப் பிரிவுகளையும் படிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு 2011 ஆம் ஆண்டுக்குப் பின் தரம் உயர்த்தப்படுகின்ற மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஒதுக்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: ஆனால், அதற்கு முன்புள்ள காலங்களில் தரம் உயர்த்தப்பட்டபோது, மேல்நிலைப் பள்ளிகளுக்கு 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்தான் ஒதுக்கப்பட்டன. அதாவது, 2011–க்குப் பிறகு தரம் உயர்த்தப்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் இருக்கும்போது, 25 ஆண்டுகளுக்கு முன்பு தரம் உயர்த்தப்பட்ட பாவூர்சத்திரம் ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்றும் 8 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்தான் இருக்கின்றன. சுமார் 840 மாணவிகள் படித்து வருகின்ற இந்தப் பள்ளியில், வரலாறு, தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கு 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரரான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிவந்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும் அள்ளி அள்ளித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது 2011–க்குப் பிறகு தரமுயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உள்ளன என்றும், உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பள்ளியில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை என்றும் சொன்னார்கள்; வரலாற்றுத் துறை ஆசிரியர் இல்லை என்றும் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடந்து கொண்டிருக்கிற இந்த அரசு, சிறப்பான முறையிலே தமிழகத்தில் வரலாற்றைப் படைக்கும். இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்புவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஒரு மாத காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகராட்சியிலே ஆண்களுக்கு என்று தனியாக அரசினர் மேல்நிலைப் பள்ளி இல்லை. எனவே, அரசினர் மேல்நிலைப் பள்ளி ஒன்று கட்டித் தர முடியுமா என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், வட்ட அளவில் ஆங்காங்கு நூலகங்கள் இருக்கின்றன. செங்கல்பட்டிலே வட்ட நூலகம் இருக்கின்றது. என்னுடைய தொகுதி மதுராந்தகம் ஒரு வட்டம். அங்கே கிளை நூலகம் இருக்கிறதேயொழிய வட்ட நூலகம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சு. புகழேந்தி: தேசிய நெடுஞ்சாலையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்த நீதிமன்றம் மற்றும் சார் ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் 50 சென்ட் இடம் இருக்கிறது. அங்கே வட்ட நூலகம் கட்டித் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டித் தரப்படுமா என்று கேட்டார்கள். ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை உருவாக்கியதற்குப் பிறகுதான் கட்டடங்கள் கட்டித் தர முடியும். ஆகவே, இந்த ஆண்டு அவருடைய கோரிக்கையை அரசு கனிவாகப் பரிசீலிக்கும். மேலும், வட்ட நூலகம் அமைத்துத் தர வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தருவாரேயானால் உடனடியாகக் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே மக்களுக்காக மக்களாட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

எங்களுடைய உசிலம்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில், அது மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய உசிலம்பட்டி தொகுதியில், பெண்களுடைய வளர்ச்சிக்காக, பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி மற்றும் சேலம் மாவட்டம் ஆகிய இடங்களில் வறுமையின் காரணமாகப் பெண் குழந்தைகளை சிசுவிலேயே கொலை செய்வதைத் தடுப்பதற்காக நம்முடைய தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். வறுமையின் காரணமாக பள்ளிக் கல்வியைத் தொடர முடியாமல் இருக்கின்ற காரணத்தினால், எங்களுடைய உசிலம்பட்டி பகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்

2017 ஜூலை 4]

அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, உசிலம்பட்டி தொகுதியைப் பின்தங்கிய தொகுதி என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிருக்கின்றபோது தமிழகத்திலே எந்தத் தொகுதியும் பின்தங்கிய தொகுதியாக இல்லை. அனைத்தும் முன்னோடித் தொகுதிகளாக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு இந்த ஆண்டு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

பகுதிநேர நியாய விலைக் கடை

***16840—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், தியாகை ஊராட்சி, கடம்பூர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

‘மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்;